Regd. No. M. 4900.

8 பக்கங்கள்.

குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-1-0
வெளிநாடு „ ரூ. 9-0-0. „ 0-1-3.

மாலை 22 ஈரோடு 2-4-1949 சனிக்கிழமை மலர் 30.

புளுகு மூட்டை.

பித்தன்! பிறைசூடிப் பெருமன்!!

"கங்கை புனை யீசனே, மங்கை மகிழ் நேசனே, கயிலையங்கிரி வாசனே!" என்று தொடங்கிவிட்டேன் பாட. எதிரே எம்பெருமான் ஆலமுண்ட நீலகண்டன் தில்லைப் பொன்னம்பலத்தில் ஆனந்த நடமிடுங்காட்சி, சித்திர வடிவில் சுவரில் ஊசலாடிக் கொண்டிருந்தது. அதைக்கண்டதும் எனக்கு ஒரே பக்திப்பிரவாகம் ஊற்றுப் போல்பெருகவே, பாட்டைத்தொடர்ந்தேன்மேலும். "பெண்ணை இடத்திலே வைத்த இறைவர் சடாமகுடத்திலே கங்கை அடங்கும்" என்ற காளமேகப் புளுகர் பாடலிலிருந்து, கடைசியாகச் சுந்தரமூர்த்தி அய்யர் தேவாரத்தையும் ஒரு கை பார்த்துவிட்டேன்: "பித்தா, பிறைசூடி பெருமானே அருள்வா, வா!" என்று பாடிக்கொண்டே 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும்' வேளையில்—என்ன ஆச்சரியம்!—எதிரில் படத்திலிருந்த சிவபெருமான் உயிர்பெற்றுக் கீழே இறங்கி வந்து, எதிரே சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்! கவலைக்குறி படர்ந்த முகம்; ஏக்கமும், தாபமும் நிரம்பிய கண்கள்; வெறி கொண்ட சாயல், "பக்தா, ஏன் என்னை அழைத்தாய்? சாக வழி தெரியாமல் தவிக்கும் நான் உனக்கு என்ன உதவி செய்யப்போகிறேன்" என்றார் சிவன்.

"உமக்கு என்ன அப்படித்தொல்லை வந்து விட்டது; நீர்தான் முழு முதற் கடவுள் என்கிறார்களே?"

"எல்லாம் ஏட்டளவில் தான். ஒன்றா, இரண்டா, என் துயரம்? இப்போது நீ கடைசியில் அழைத்தாயே 'பித்தா' என்று, அதுதான் உண்மை. நான் என்னதான் செய்ய முடியும்? தற்கொலை செய்து கொள்ள எண்ணித்தான் விஷத்தை அருந்தினேன். அந்தப்படுபாவி பார்வதி மென்னியைப் பிடித்து அழுத்தித் தடுத்துவிட்டாள். கட்டிய மனைவியரால் துன்பம்; பெற்ற பிள்ளைகளால் துயரம்; வாழ்வின் இன்பம் பூரணமாக அனுபவிக்க முடியாமல் வெறி. இவ்வளவும் சேர்ந்தால் பித்தம் பிடிக்காமல் இருக்குமா? நீ தான் சொல்லேன்!"

"கொஞ்சம் விபரமாகத்தான் சொல்லுமே!"

"ஆகா, தடையென்ன? சொல்லித்தான் ஆறவேண்டும். என் வாலிபப் பருவம்; வாழ்க்கையின் மலர்ச்சியோடிருக்கவேண்டிய காலம்; மலைக்காடுகளில் வேட்டையாடிக் கொண்டு திரிந்து வரும்போதுதான், ஒரு நாள் பார்வதியைச் சந்திக்க நேரிட்டது. அவளது கண்கொள்ளாக் கட்டழகு என்னைப்பித்தனாக்கிற்று. அவளையே மணக்கவேண்டும் என்ற முயற்சியுடன் அவள் தந்தையைச் சரிப்படுத்திவிட்டேன். திருமணமும் நடந்தது. ஆனாலும் பயனில்லை. என் உருவமும் எழிலும் அவளுக்குத் துளியும் பிடிக்கவில்லையாம்! இதை முதலிலேயே சொல்லித்தொலைத்திருந்தாலும் பரவாயில்லை. கலியாணம் ஆனபின், மனைவி தன்னை விரும்பவில்லை என்றறிந்த கணவன் மனம் எப்படியிருக்கும்! பலவந்தமாய்க் கூடுவதில் சுகமுண்டா? அவளோ பிரம்மதேவனுடன் கள்ள நட்புக்கொண்டாள். அதையும் தெரிந்து கொண்டேன்; பெற்ற பிள்ளையாகிய கணேசனுடனேயே சோரம் போனாள்; இதையும் கண்கூடாகக்கண்டேன்; என்மனம் எவ்வளவு வேதனைப்பட்டது? என் மைத்துனனாகிய நாராயணன் தன் மனைவி லட்சுமியை எப்போதும் மார்மீது சாத்திக்கொஞ்சியவாறு இருப்பதைப் பார்க்க என் மனம் பேதலித்தது. காமவெறி கண் தெரியாமல் மறைத்தது.. ஓடினேன் பார்வதியிடம். பட்டப்பகலிலேயே அவளைப் பலாத்கரித்தேன். வெகு காலம் விடவில்லை அவளை. கந்தன் பிறந்தது அப்போதுதான். என் மோகம் மேலும் அதிகரிக்கவே பார்வதியின் தோழிகளாகிய நவ சக்திகளையும் பெண்டாளத் துணிந்தேன். அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள்தான் வீரவாகு முதலியோர்.

கந்தன் பிறந்தபின், என் மனைவி என்மேல் மிக்க வெறுப்புக் கொண்டு பிறந்த வீட்டுக்கு ஓடிப்போய் விட்டாள். மனைவியில்லாமல் எவ்வளவு நாள் வாழ முடியும்? ஜன்னு முனிவர் மகள் கங்கை பேரழகு படைத்த இளமங்கை. இவளைக் கடத்திச்செல்ல முயன்ற பகீரதனைத் தடுத்துக் கங்கையை நான் தூக்கிக்கொண்டு வந்துவிட்டேன். உடனே அவளும் என் மனைவியானாள். ஆயினும் பயன் என்ன? இவளும் விரைவில் எனக்குத் துரோகமிழைத்து விட்டாள். அருகிலிருந்த சந்திரனுடன் காதல் நாடகம் ஆடத் தொடங்கி விட்டாள் கங்கை. முன்பு, அத்திரி முனிவர் மனைவி தாரா இடத்தில் நடந்து கொண்டதைப் போலச் சந்திரன் என் மனைவி விஷயத்திலும் நடந்து என்னை வஞ்

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

இங்கர்சால் சொற்பொழிவு.

ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஒரு சமயம் புனிதமான பிஷப்பைப் போல் வேடந்தரித்து, ஓர் அழகிய விதவையை அறையினின்றும் இழுத்ததாம். திறமையாக நடித்துப் பலரையும் உண்மைப் பாதிரியே—பிஷப்பே என்று நம்ப வைத்ததாம். தன் காதலன் பிஷப் தான் என்று அந்த விதவையும் எண்ணிக் கொண்டாளாம். அவ்வளவு திறமையாக யாவரையும் ஏமாற்றி இருக்கிறதாம். இவை யாவும் புனித மனிதர்கள் மேல் அபாண்டம் சுமத்தச் செய்தவைகளாம்.

இதைப் போன்ற நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகள் குருமார்களுக்கும், சாத்தானுக்குமாக, நீண்டதும் கசப்பதுமான போர் நடந்திருக்கிறது.

இந்த போப்புகளும், பாதிரிகளும், குருக்களும் அயோக்கியர்களல்ல. அவர்கள் புதிய ஏற்பாட்டிலும் கிருஸ்துவின் போதனையிலும் நம்பிக்கை கொண்டவர்களாதலால், பேய்களின் மூல வியாபாரத்தை யறிந்து அதை ஒட்டும் முறைகளையும் கையாண்டனர்.

ஆலயம் என்ன செய்துள்ளது?

ஆலயம்பெண்ணைஅடிமையாக்கி ஆணின் உரிமைப்பொருளாகஆக்கி —கிருஸ்துவிற்கு எவ்வளவு அடிமையாக ஆண் வாழ்கிறானோ, அவ்வளவு அடிமையாக பெண்ணை ஆணினத்திற்கு அடிமையாக்கி வைத்துள்ளது. கன்னிப் பெண் (கன்யாஸ்திரி) ஒரு தாயை காட்டிலும் தூய்மையானவள் எனப் போதித்துள்ளது. கோடிக் கணக்கான தூய்மையும் நல்லிதயமுமுள்ள பெண்களை தங்கள் வாழ்வின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் முறையிலே, இரவுகளிலும் பிணங்கள் முன்னிலும் முக்காடிட்ட தங்கள் இறந்த (கால) பழக்கங்களை காட்டி, தாங்கள் கிருஸ்துவின் மனைவியர் என்பதை தெரிவித்துக் கொள்ளுமாறு செய்துள்ளது.

என்னைப் பொறுத்தவரையில், நான் பதினெட்டு நூற்றாண்டுகளுக்குமுன் முடிந்த ஒரு மனிதனின் மனைவியாக இருப்பதினும், ஒரு விதவையாக இருக்க விரும்புவேன்.

ஏழையும், கோழையுமான பெண்கள், தாங்கள், எங்ஙனம் ஒரு அதிசய முறையில் கடவுளுடன் புனிதமாகப் பிணைப்புண்டவர்கள் எனக் கற்பனை செய்து கொள்கின்றனர். எல்லா உலக ஆசைகளும் அவர்களின் உள்ளத்தினின்று நீக்கப்பட்டுவிட்டனர். அவர்கள் பட்டினியினாலும், பிரார்த்தனையினாலும் தம்மைத் தாமே வருத்திக்கொள்வதாலும், தங்கள்வாழ்க்கையை நிரப்பிக்கொண்டார்கள். தங்கள் தாய், தந்தையரை மறந்து காணமுடியாத ஒன்றின்மேல் தங்கள் காதலைச் செலுத்தினர். அவர்கள் தவறானவர்கள், தெய்வீகத்தின் குற்றவாளிகள், கடவுள் என்ற கோட்டையின் கைதிகளாவர். அவர்கள் நியாய உள்ளமுடையோர்கள், நல்லவர்கள், உண்மையானவர்கள், ஆனால் பைத்தியக்காரர்கள்.

இந்தப் பெண்கள் தங்கள் இதயங்களைப் பயத்திற்குக் கொடுத்து, தங்கள் வாழ்க்கையை ஒரு கனவாக ஆக்கிக்கொண்டார்கள்.

ஒரு சில ஆண்டுகட்கு முன்னே ஓரிடத்தில் ஓரழகிய இளம் பெண் "மதம் மாறினாள்"-"மறுபிறப்பு" எடுத்தாள். அவள் தன் மகிழ்ச்சியிலே "நான் கிருஸ்துவை மணந்து கொண்டேன், நான் கிருஸ்துவை மணந்து கொண்டேன்" என்று கூவினாள். அந்த உணர்ச்சியிலேயே ஒரு கிழவனின் தோளிலே தன் கையை சுற்றி, மறுமுறை "நான் கிருஸ்துவை மணந்து கொண்டேன்" என்று கூவினாள். அந்த கிழவன் கொஞ்சம் நம்பிக்கையற்றவர்போல் தோற்றுகிறது- மெதுவாக அவள் கையை எடுத்துவிட்டு அதே நேரத்தில், "எனக்கு உன் கணவனைப்பற்றி ஒன்றுந் தெரியாது. ஆனால் உன் மாமனாரிடம் எனக்கு அதிக மதிப்புண்டு" என்று கூறினார்.

பெண்களின் நல்லுள்ளமும், அன்பின் கவர்ச்சியும், பாதிரிகளையும், வேதாந்திகளையும், பயன்படுத்திக் கொள்ளச் செய்தது. அவர்கள் நம்பிக்கையிலும் பயத்திலும் வாழ்ந்தார்கள். அவர்கள் அட்டைகளைப் போல், குருதியை உறிஞ்சினார்கள். உலகப் பாபங்களுக்குப் பெண்களே பொறுப்பாளர்களாகஆக்கப்பட்டனர் அவர்கட்குஅடிமைத்தன்மை, கோழைத்தன்மை, கேவலத்தன்மை, தேவையற்ற கீழ்படிவுதன்மை முதலிய தன்மைகளை போதித்தனர். அவர்கள் எண்ணத்திலே தவறுகள், அதிசயம், புரியாதன ஆகியவைகளை புகுத்திவிட்டனர். அவர்கள் மூளையை திடமற்றதாகவும், சபலமுடையதாகவும் ஆக்கிவிட்டனர். ஆதாரத்திற்கும், நம்பிக்கைக்கும்; உண்மைக்கும், வேதாந்தத்திற்கும் எவ்விதமான சம்பந்தமும் இருக்கவே முடியாது.

ஆலயம் என்ன நன்மை செய்துள்ளது?

ஆலயம் விற்பனையின் எதிரியாக இருந்திருக்கிறது. வட்டிக்குப் பணம் எடுப்பதை மறுத்திருக்கிறது. வட்டிக்குப் பணம் எடுக்காமல், முன்னேற்றத்திற்கு வழி கோலுவது முடியாது. நீராவிக் கப்பல்கள், பெரும் ஆலைகள், புகைவண்டிப்பாதை, வட்டிக்கு பணம் எடுக்காமல்-பங்கு எடுக்காமல் கட்டவும், நடத்தவும் படவில்லை.

ஆலயம் (Fire Insurance) தீ விபத்து நீக்க சேமிப்பு திட்டத்தை எதிர்த்துள்ளது. பயனற்ற கூட்டத்து (Gambling) தவறு நடத்தையாளர் கூட்டத்து (Immoral) சேமிப்பை எதிர்த்துள்ளது. வாழ்க்கை சேமிப்பு திட்டத்தில் சேர்ந்தவர்கள் கடவுளிடம் நம்பிக்கையற்றவர்கள்—தெய்வீக நம்பிக்கையினும் துரைத்தனத்தாரிடம் அதிக நம்பிக்கை கொண்ட கயவர்கள் என்று கூறியது. கடவுள், விதவைகட்கும், தந்தையற்ற குழந்தைகட்கும் உதவுவார் என்று கூறப்பட்டது.

வாழ்க்கை சேமிப்பு திட்டத்தில் சேர்வது, மேலுலகத்தை அவ

நெஞ்சு பொறுக்குதில்லையே!

★

காலம் பலகாத தூரங்களைக் கடந்து விட்டது. காலம் அதன் போக்கில் பல நாடுகளில் நடந்த மறுமலர்ச்சிகளைக் கண்டது; சமூக அமைப்பில் ஏற்பட்ட புரட்சிகளைக் கண்டது; விஞ்ஞான வளர்ச்சியில் உண்டான விறுவிறுப்பைக் கண்டது. ஆனால் இந்த நாட்டிலோ எந்தவிதமான மாற்றத்தையும் காணாத காரணத்தினால் 'கல கல' வென்ச் சிரித்துக்கொண்டு செல்லுகிறது காலம். சிரிப்பினூடே இவ் விழிந்த நாட்டை நோக்கி "பைத்தியக்கார நாடே, பிற நாட்டுச் சரித்திரங்களைப் பார்," எனப் பகர்கின்றது.

ரோம் நகரத்துச் சந்தையில், சில ஆங்கில வாலிப அடிமைகளைக் கிரகோரி என்னும் கிருஸ்துவ மதத் தலைவர் சந்தித்தார். அவ்வடிமைகளை அணுகி அன்பாக விசாரித்தார். அவர்களிடம் பேசிக்கொண்டிருந்ததன் மூலம் அவர்கள் நாட்டில் கிருஸ்துவ மதம் பரவவில்லை யென்பதையும், அங்குள்ள மக்கள் நாகரீக மடையவில்லை யென்பதையும் அறிந்து கொண்டார். உடனே அகஸ்டீன் என்னும் தனது சிஷ்யகோடியைப் பிரிட்டனில் கிருஸ்துவ மதப் பிரசாரம் செய்வதற்காக அனுப்பிவைத்தார். கி. பி. 597-ல் பிரிட்டனில் கெண்ட் பிரதேசத்தில் வந்திறங்கினார் அகஸ்டீன். அப் பிரதேசத்து மன்னர் அகஸ்டீனை வரவேற்றார்; அகஸ்டீனுக்குப் பிரசாரத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். மூடப் பழக்க வழக்கங்களில் மூழ்கிக்கிடந்த பிரிட்டானியர்கள்—ஓடன், தார், போன்ற பல தெய்வங்களை வணங்கிவந்த பிரிட்டானியர்கள் 'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்' என்னும் நியதியைக் கொண்டுள்ள கிறிஸ்துவ மதத்தை எதிர்த்தனர். புதிய மதத்தின் காரணமாக மன்னர்களுக்கிடையே போர் மூண்டது. பலர் மாண்டனர், முடிவில் கிறிஸ்துவ மதம் நாடு முழுவதும் பரவியது. பரவியதன் பலாபலன்களாக, மக்கள் நாகரீகமடைந்தனர், நாடு முழுவதும் பல அழகிய நகரங்கள் தோன்றின.

மத்திய காலத்தில் மதத்தின் பெயரால் மக்களைச் சுரண்டி வாழ்ந்தனர் மதத் தலைவர்கள். பாப மன்னிப்புச் சீட்டுகள் வழங்கிப் பாமர மக்களை ஏமாற்றிப் பணம் பறித்தார் கிருஸ்துவ மதத் தலைவர். இதைக் கண்டு மனம் வெதும்பினார் மார்ட்டீன் லூத்தர். மக்களை ஏமாற்றும் இந்த மானங்கெட்ட முறையை அனுமதிக்க முடியாது என்று பகிரங்கமாகக் கண்டித்தார் லூதர். 'மதத் துரோகி' என்று மார்ட்டீன் லூதரைத் திட்டித் தட்டிக்கழிக்கப்பார்த்தார் மதத் தலைவர். ஆனால் மக்கள் உணர்வு பெற்றெழுந்தனர். மதம் இரண்டாகப் பிரிந்தது. மதத் துறையில் ஏற்பட்ட புரட்சியாகும் இது.

"உயிர்வகைகளின் தோற்றம்' என்னும் அரியதொரு நூலை, சால்ப் பேரறிஞர் டார்வின் வெளியிட்டார். அறிஞர் வெளியிட்ட உண்மைகள் அவனியிலுள்ளோரைப் பரபரப்பிலாழ்த்தியது. மத, சாத்திரப் பண்டிதர்களும், உயிர்நூல் வல்லாரும் அவ் வுண்மைகளைக் கண்டு அஞ்சி நடுங்கி, அச்சிலும் பேச்சிலும், பெருங் கூச்சலிட்டனர். அறிஞர் எடுத்துக்காட்டிய உண்மைகளை ஆராய்ந்து மறுக்கவியலாமல், அவ்வுண்மைகளை அங்கீகரிப்பதால் வருங் கேடுகளைப் பெருக்கி, வர்ணித்து, டார்வினையும் அவர் வழிச் சென்றோரையும் வாய்க்கு வந்தபடி திட்டினார். ஆனால் உண்மை உயர்ந்தோங்கி வளர்ந்தது. இன்று டார்வின் சித்தாந்தத்தை மேல்நாட்டினர் ஒப்புக்கொள்கின்றனர்; அரிய உண்மைகளை வெளியிட்ட அறிஞரைப் பாராட்டுகின்றனர். இந்த அளவிற்கு மேனாட்டில் மக்கள் மாற்றமடைந்துள்ளனர். ஆனால் நம் நாட்டில் ஏதாவதொரு மறுமலர்ச்சி நடந்துண்டா? மக்கள் மனப்பண்பு மாறியதுண்டா?

அண்டிப் பிழைக்க வந்த ஆரிய நரிக்கூட்டம் திராவிடர்களை ஏய்த்துப் பிழைக்க மதத்தைத் துணைக்கொண்டனர். ஆரியர்கள் ஆபாசமான, அநாகரீகமான, கற்பனைக் கதைகளைக் கட்டினர். கற்பனைக் கதைகளிலுள்ள சற்பாத்திரங்களத்தனையையும் கடவுள் அவதாரங்கள் என்று சரடுவிட்டனர். நம்மவர்கள் மதிமயங்கி அவர்கள் வலையில் வீழ்ந்தனர். கி. பி. 600—650-க்குள் தோன்றிய அப்பர் கூட்டம் ஆரியத்திற்கு அடிவருடியது. ஆரியப்பித்தேறிய அப்பர் கூட்டம் தேவாரத் திருப்பதிகங்கள் இயற்றி இன்னிசை கொண்டு பாடி இந்து மதத்தை ஏத்தினர்; மக்களை ஏய்த்தனர். ஆரியத்திற்கு அறிவை அடகு வைத்த அப்பர் கூட்டம், தமிழர் பண்பாடு கலாசாரத்தைக்கெடுத்த பார்ப்பனக் கும்பலை "புடையார் கமலத்தயன் போல்பவர்" 'மொய்த்த கதிர் மதி போல்பவர்' எனப்புகழ்ந்தது. மக்கள் ஆரியத்திற்கு மதிப்பளித்தனர். மடமை வளர்ந்தது. தமிழ் மறையாகிய திருக்குறளுக்கு மனுதர்ம ரீதியில் உரையெழுதி, வள்ளுவர் கொண்ட உண்மையான கருத்துகளை மறைத்துவிட்டது பரிமேலழக வர்க்கம். தன் இனத்தாரைச் சிறிய திருவடிக் கூட்டங்களாகவும், அசுரர்களாகவும் சித்திரித்திருக்கிறானே வால்மீகி, தான் இயற்றிய இராமகாதையில், என்ற தன்மானங்கூட இல்லாது, வால்மீகி இயற்றிய காதையைமுதல்நூலாகக்கொண்டு கம்பன் இராமாயணத்தை எழுதி முடித்தான். இவ்வாறாக எழுதப்பட்ட நூல்களனைத்தும் ஆரியத்தைப் போற்றுபவைகளாகவும் இந்து மதத்தை வளர்ப்பனவைகளாகவும் இருந்தன. இன்றுவரை அதே நிலை. மக்கள் அன்று வணங்கிய காட்டுமிராண்டித்தனமான கடவுள்களை இன்றும் வணங்குகிறார்கள். அன்று கொண்டொழுகின மூடநம்பிக்கை

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

மதிப்பதாகும்என்று கூறியுள்ளது.

ஆலயம் செய்த நன்மை யாது?

ஆலயம், மடையர்களை கடவுளின் தூதுவர்களாகக் கூறியது. தெய்வீகத்தந்தை "இருண்ட மரணத்தை" அனுப்பி, ஒரு சிலரை கருணையாலும், மற்றையோரை நீதி என்ற கொலையாலும் ஆட்கொள்கிறாராம். . எதிர்ப்பை, கடவுள்முன் முழந்தாளிட்டு பணிந்து, கருணையை பெற்று, ஊர்வலத்தாலும், பிரார்த்தனையாலும், வன்மை பெற்று; நீதிவான்களை தீயிலிட்டு எரித்தும், வாக்குப் பெற்றும் வெல்லலாம் என்று கூறி இருக்கிறது. காரணங்களை நீக்க அவர்கள் முயலவில்லை. காரணம் கடவுளாகக் கருதப்பட்டது. அவர்கள் தூயநீரை என்றும் கேட்டதில்லை; புனிதநீரை கேட்டார்கள். தெய்வீகமும், கேவலமும் ஒன்றாக வாழ்ந்து மடிந்தது. மதமும், கழிவும்; பஞ்சமும், பசலையும் என்றுமே கூட்டுத்தோழர்கள்.

புண்ணியம் என்றுமே மறைவாக வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வாரம்.

சில அசௌகரியங்களினால் இந்த வாரம் 8 பக்கம் மட்டுமே பிரசுரித்திருக்கிறோம். தயவு செய்து மன்னிக்க வேண்டுகிறோம். இவ்வாரம் தனிப்பிரதி விலை ஒரு அணா. மானேஜர்.

குடி அரசு

2—4—49 சனிக்கிழமை.

தோழர் அழகிரிசாமி!

தமிழரின் தன்மானப் போர்த் தளபதி—அஞ்சா நெஞ்சன்—பட்டுக்கோட்டை அழகிரிசாமியவர்கள் இயற்கை எய்தினார் என்ற சேதி எவரும் எதிர் பார்த்தது என்றாலும் செய்தியைக் கேட்டவுடன் பேரதிர்ச்சியைத் தராமலில்லை.

சமுதாயத்தின் என்புருக்கியான ஆரியச் சழக்கரோடு தீவிரமாகப் போர்தொடுத்த அவரின் உடம்பை, என்புருக்கி நோய் இன்று இரையாகக் கொண்டுவிட்டது.

தோழர் அழகிரி—ஆம்! தோழமை என்பதன் தத்துவத்தை நன்குணர்ந்த அழகிரியவர்கள், இறப்பை, இன்றோ நாளையோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர் தான். அப்படி எதிர் பார்க்க வேண்டிய நிலையில், தன்னுடைய வாழ்வைப் பற்றிப் பெருங்கவலை கொள்ளாதவராய் இருந்தவர், தன்னை அவர் பழக்கிக் கொண்டவர் என்று கூறினால் அது தவறில்லை.

“சானடோரியத்தில் இருப்பதைக் காட்டிலும் அவர் தன்னுடைய வீட்டுக்குச் சென்று ஓய்வு பெற்றுக்கொள்வது நல்லது” இது, அவர் பெருந்துறை சானடோரியத்துக்குத், தோழர்களின் தூண்டுதலால் போனபோது அங்குள்ள டாக்டரால் கூறப்பட்ட ஆலோசனை. “சாவதை ஆஸ்பத்திரியில் சாவாதே, வீட்டுக்குப்போய் இறந்துவிடு” என்பதுதான் இதன் கருத்து. இதை டாக்டர் கூறுவதற்கு முன்னாலேயே அழகிரி அறிவார். அதனால் தான் அய்ம்பதாயிரத்துக்கு மேற்பட்டுக் கூடும் தோழர்களை, நாம் வேறு எங்கு, எப்போது சந்திக்கப் போகிறோம்? என்கிற ஓரே ஏக்கத்தினால் அவர் ஈரோட்டு மாநாட்டுக்கு எப்படியும் வந்து சேரவேண்டும் என்கிற துடிப்போடு வந்து, மாநாட்டில் கலந்துகொண்டதாகும்.

ஈரோட்டு மாநாட்டைப் பெரியாரவர்கள், “ஒருவர்க்கொருவர் விடை பெற்றுக் கொள்ளும் மாநாடு” என்று குறிப்பிட்டார்கள்; பார்ப்பனீய அடிமைகளான இந்துஸ்தான் தாங்கிகளால், எந்த நேரத்தில் எப்படி வேண்டுமானாலும் ஒடுக்கப்படலாம், ஒழிக்கப்படலாம், மறைக்கப்படலாம் என்ற துணிவினால். அதுபோலவே சில காட்சிகள் நடந்து முடிந்தன. அடுத்த சில பாகங்கள் எப்போதோ? ஆனால் அதே மாநாட்டில் தோழர் அழகிரி அவர்கள், “உங்கள் அனைவரையும் மறுபடியும் காண்பேனோ? சொல்லமுடியாது. என் தலைவருக்கும் தோழர்களுக்கும் இறுதியாக என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளவே இப்போது வந்தேன்” என்று அவர் கூறியது இன்று முற்றிலும் உண்மையாகி விட்டது.

எதிரியாக வந்து உட்கார்ந்தாலும், சிரிக்கச் சிரிக்கவைத்துப் பின் இடித்து இடித்துக் கூறும் அவர் வாய்ச் சொற்கள், பண பலத்திற்கோ, திமிர் பலத்திற்கோ, பணிந்துவிடாத—தயவு தாட்சண்யம் பாராத அவர் அஞ்சா நெஞ்சம், ஆகிய இவற்றை ஈரோட்டு மாநாட்டில் தோழர்கள் கண்டிருக்கமுடியாது. கம்பீரமான நீண்ட தோற்றம்—கனல் வீசும் கண்கள்—கொஞ்சும் தமிழ்ச் சொற்கள் அன்றில்லை—மாய்ந்தொழிந்தன. உட்கார்ந்த நிலை—ஒளி குன்றிய தோற்றம்—உள்ளத்தை உருக்கிடும் சோகச் சொற்கள், இவைதான் அன்று கண்டவை.

பெருந்துறையும்—தாம்பரமும், காலங்கடந்த முயற்சி என்பதையே அன்று ஈரோட்டில் அவர் சொற்கள் கூறியது, அவர் உடலம் அதை ஆதரித்தது. மறைவு இன்று நிரூபித்தது. இன்று அவர் மறைந்தே போனார்.

கல்லும், கட்டாந்தரையும், முள்ளும் புதருமாய் இருந்த புன்செய், பெரும் பகுதி இன்று நன்செய்யாக மாற்றப்பட்டு விட்டது. திருத்தி மாற்றப்பட்ட நன்செய்யில சீரிய விதைகள் தூவப்பட்டு, அவை முளைவிட்டுப் பின் வளரவும் ஆரம்பித்து விட்டன. பயிர் வளர்ச்சியையே முதலில் பார்ப்பவன், நீர் பாய்ச்சும் துயரத்தையும் களை பிடுங்கும் தொல்லையையும் கண்டாலும்கூட, நன்செய்யின் ஆதி வரலாற்றை—அது நன்செய்யாக உருமாற எத்தனை பேர், எத்தனை நாள், எவ்வளவு கஷ்டப்பட்டு, எப்படி நன்செய்யாக மாற்றினார்கள் என்பதை எப்படி அறிந்துகொண்டுவிட முடியும்?

கல்லும் முள்ளுமாயிருந்த புன்செய், ஆரிய நச்சுக் கருத்துகள் படர்ந்த திராவிடச் சமுதாயம். அதை நன்செய்யாக மாற்ற முயன்ற முயற்சியில் தோள் கொடுத்து, பெரியாரவர்கட்கு உதவி புரிந்த சிலருள் தோழர் அழகிரி ஒருவர். அந்தச் சிலருள், சிலர் ஏற்கனவே இயற்கை எய்திவிட, சிலர் களையாக மாறிப் பின் கையாலாகாதவர்களாய்ப் போய்விட, எஞ்சி நின்ற ஒருவர்—குறிக்கத்தகுந்த சிறப்புடைய உழுபடை வீரர், அவர். அன்றிருந்து இன்று வரை சளையாமல், பெரியார் வழி பற்றிய பெரும்போர் மறவன் என்கிற பெருமை அவர் ஒருவருக்கே உண்டு. சென்ற இந்தி எதிர்ப்புப் போரில், 1938-ல், தமிழர் பெரும்படை நடத்தி, திருச்சியிலிருந்து சென்னைவரையுள்ள ஊர் தோறும், தமிழரின் தன்மானப் போர் முரசுகொட்டி, வெற்றிச் சங்கு ஊதி வீரர் பலரைப்பாசறையில் சேர்த்த வெற்றி வீரன், அதற்குப்பின் மிக விரைவிலேயே என்புருக்கியால் தாக்கப்பட்டு,

[உரிமை ஆசிரியருக்கே]

தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

அகப்பொருட் சுருக்கம்.

1. களவு: முற்கூறிய அகப்பொருள் களவு, கற்பு என இரு வகைப்படும். களவாவது, ஒத்த பருவம், உருவம், குணம், குறியுள்ள ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் கூடும் கூட்டம். தமக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவரைத் தாமாகவே தேர்ந்தெடுத்துக் கொள்வது. அது, (1) வேட்டையாடுதற்காக ஒரு மலைச்சாரலை யடைந்த ஒரு தலைவன், தன் தோழர்களைப் பிரிந்து தனியாக ஓரிடஞ் செல்ல, அங்குதோழியரோடு தினைப்புனங் காத்து வந்த மலைவாணர் மகளொருத்தி, தோழியரைப் பிரிந்து தனியாக வந்து அத்தலைவனை எதிர்ப்பட, இருவரும் ஒருவரை யொருவர் காதலித்துக் கூடிமகிழும் இயற்கைப் புணர்ச்சியும்; (2) முதல் நாட்போலவே மறுநாளும் அதே இடத்தில் இருவரும் எதிர்ப்படும் இடந்தலைப்பாடும்; (3) அங்ஙனம் தலைவியை எதிர்ப்பட்டுப் பிரிந்து சென்ற தலைமகன், தன் உயிர்த் தோழனை அடைதலும், அவன் தன் தோழனது மெய்வேறுபாடு கண்டு அதன் காரணங்கேட்டலும், தலைவன் தன்னை வருத்திய தலைவி தன்மை கூறலும், தோழன் சென்று தலைவியை ஒரு தனியிடத்தே கண்டு, வந்து கூறிய இடத்தேசென்று தலைவன் தலைவியை மூன்றாமுறை கூடுதலும் ஆகிய பாங்கற்கூட்டமும்; (பாங்கன்—தோழன்.) (4) இனித் தோழியரால் எப்போதும் சூழப்பட்டுள்ள தலைவியை, இவ்வாறே பலநாளும் தனியாகக் கண்டு பேசுதல் (கூடுதல்) முடியாதாகையால், தலைவன் தலைவியின் உயிர்த்தோழியை அறிந்து, அவளிடம் சென்று குறிப்பாகவும், வெளிப்படையாகவும் தன் கருத்தைக் கூற, அவள் பலவாறு ஆராய்ந்து பார்த்து, இருவர்க்கும் காதல் உண்மையுணர்ந்து அவளும் அதற்குடன்படும தோழி மதியுடம் பாடும்; (இது தோழியிற் கூட்டம் எனவும் படும்.) (5) இங்ஙனம் தோழியின் உடன்பாடு பெற்றுக் கூடிவரும்போது, இது பிறர்க்குத் தெரியின் இழுக்காகும் எனத்தோழிமறுக்கவே, தலைவன் நீ மறுத்தால் நானே இக்களவொழுக்கத்தை வெளிப்படுத்துவேன் எனக்கூறத், தோழி வேண்டாம் எனத்தடுக்கும் மடல் விலக்கும்; (6) இவ்வாறு இருவரும் தோழியின் உடன்பாடு பெற்று, தோழிக்குத் தெரியக் கூடிவரும் போது தினைக்கதிர் முதிரவே, காவல் காப்பதை விட்டுத் தலைவி வீடு செல்லவே, தலைவன் தோழியும் தலைவியுங் காட்டிய குறிவழியே சென்று கூடும் குறியிடமும்; (பகலில்சென்று கூடும் இடம் பகற்குறி எனவும், இரவில் சென்று கூடும் இடம் இரவுக்குறி எனவும் பெயர் பெறும். பகற்குறி புனங் காத்திருந்தபோது நிகழும்.) (7) இவ்விருவகைக் குறியிடத்தும் கூடிவருதல் அரிதாகலான், தலைவியை மணந்து கொண்டு வாழும்படி தோழி தலைவனை வேண்டும் வரைவுகடாதலும்; (வரைவு—திருமணம். கடாதல்—வினாவுதல்) (8) இக்களவொழுக்கம் முதலில் சிலர்—பலர்க்குத் தெரிந்து, பின்னர் ஊர் முழுதும் தெரியவே, பெற்றோர் தலைமகளை வீட்டை விட்டு வெளிச்செல்லாமல் காவல் செய்யவே, தலைமகள் தலைமகனைக் காணப் பெறாமையால் குணமும், குறியும் வேறுபடக் கண்டபெற்றோர், இல்லறம்நடத்த விரும்புகிறாள் என வேறொருவ

கண்டிப்பான அறிவிப்பு.

★

சென்ற மாதப் பில் தொகைக்குப் பூராப் பணமும் 7-4-49 தேதிக்குள் நமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்காத ஏஜண்டுத் தோழர்களுக்குக் கண்டிப்பாய் அடுத்தவாரம் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

நேரில் வந்து அழைக்குமிடம் செல்லும் 'உற்சவமூர்த்தி'யாக ஆகிவிட்டதால், இன்றைய இளைஞர் சிலர் அவரை—அவரின் உழைப்பைப் பூரணமாக அறிந்தவர்களா? என்பது சந்தேகம் தான்.

இயக்கத்தால் விளம்பரவும் பெறவும், சிலர் வியாபாரம் நடத்தவுமான இன்றைய நிலையை, இந்த நாட்டில் இன்று காணுகிறோமென்றால், அதற்கு—அந்த நிலையை உண்டாக்குவதற்கு அடிப்படைக் காரணஸ்தர்களாய் உழைத்த பெருமை, பெரியார் அவர்கட்கு அடுத்தபடி தோழர் அழகிரிக்கே உண்டு என்றால், அது வெறும் பெருமைக்குரிய பேசசல்ல.

தோழர் அழகிரியின் மறைவு இயக்கத்திற்குப் பெரிய நஷ்டம்.

இந்த வீரருக்கு நாம் செய்யும் கடமை என்ன?

அவர் செய்த தொண்டை—அவர்பின் பற்றிய பாதையைப் பின் பற்றுவதைக் காட்டிலும், உண்மையிலேயே அவருக்குச் செய்யும் மரியாதை—நன்றி வேறு எதுவாக இருக்க முடியும்?

அழகிரியின் பிரிவால் வருந்தும், அவர் குடும்பத்தினரோடு நாமும் பங்கு கொள்ளுகிறோம். தோழர்கள் அனைவர்க்கும் பெரும் பங்குண்டு!

னுக்கு மணம்பேசக் கண்ட தலைவி, தன் கருத்தைத் தோழி மூலம் பெற்றோர்க்குத் தெரிவிக்கும் அறத்தொடு நிலையும்; (குறி—உடல் வேறுபாடு.) (9) தலைவி கருத்தை யுணர்ந்த பெற்றோர், அவள் காதலித்தவனுக்கே மணஞ்செய்து கொடுக்கும் வரைவும்; (10) தலைவி அறிவித்தும் பெற்றோர் மணஞ்செய்ய உடன்படாது காலந் தாழ்த்துவரவே, தலைவனைக் காணப் பெறாதுவருந்திய தலைவியின் வேண்டுகோட்படி, தோழி பிறரறியாமல் தலைமகளைத் தலைமகனுடன் அனுப்பவே, இருவரும் தலைவனூர்க்குச் செல்லும் உடன் போக்கும்; (11) தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு செல்லும்போது தலைமகள் சுற்றத்தார் தடுக்கவரவே, தலைவி அவரிடம் செல்லாமல் தலைவனைச் சார்ந்து நிற்பதைக் கண்ட அன்னார், இவள் இல்லற வாழ்க்கையில் ஈடுபட விரும்புகின்றாள் என விட்டுச் செல்வர். இருவரும் தலைவனூர் சென்று மணம் புரிந்து கொண்டு வாழ்வர். தேடிச் சென்ற சுற்றத்தார் தலைவியின் நிலைகண்டு இருவரையும் அழைத்துவந்து மணமுடித்தலும் உண்டு. இவ்வாறு களவொழுக்கம் பதினொரு பிரிவாகவும், ஒவ்வொரு பிரிவும் பல கிளவித்துறைகளாகவும் விரித்துக் கூறப்படுகிறது. கிளவித்துறை—தலைவன் முதலியோர் பேசும் பகுதி. செயல் நிகழ்பகுதியும் இதனுள் அடங்கும். இவற்றின் விரிவைப் பின்னர்க் கூறுவாம்.

2. கற்பு: கற்பாவது, அங்ஙனம் களவொழுக்கம் ஒழுகிக் காதலன்பு முதிர்ந்து மணம் செய்து கொண்ட காதலர் இருவரும் ஒருமனப்பட்டு இல்லறம் நடத்துதல். அது, (1) இல்லற நலத்தாலும், இடையறாத இன்பத்தாலும் இருவருள்ளத்தும் மிக்குத் தோன்றும் மகிழ்ச்சியாகிய மலிவும்; (2) அங்ஙனம் மகிழ்வுற்றுக் கூடிக் கலந்து, அப்புணர்ச்சிப் பயனாகிய மக்களைப் பெற்று இன்புற்று வாழுங்கால், நாள் ஆக ஆகத் தலைவனுக்குப் புணர்ச்சியில் சிறிது வெறுப்புத் தோன்றவே, அது கண்ட தலைவி, தன்னை விட்டு வேறு மகளிரை விரும்பினாலும் விரும்பலாமென அய்யங்கொண்டு தலைவனிடத்துள்ள அன்பில் சிறிது மாறுபட்டுத் தோன்றும் புலவியும்; (3) அப்புலவி நீட்டிக்கும் ஊடலும்; ஊடல் மிக்கது துனி எனப்படும். (4) தலைவியின் ஊடல் கண்ட தலைவன், தான் தவறிலன் எனக் கூறி வேண்டத் தலைவி அவ்வூடல் தணிந்து அன்புறும் உணர்வும்; இது தலைவன் உணர்த்துவதால் உணர்த்தல் எனவும் படும். (5) உணர்ந்தபின் இருவரும் முன்போல அன்புற்றுக் கூடி மகிழும் கூடலும்; இங்ஙனம் ஊடியும், உணர்ந்தும், கூடியும் இன்புற்று இனிது வாழ்ந்துவருகையில், தலைவன் ஓதல், பகை, தூது, காவல், பொருள் முதலியவற்றின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்லும் பிரிவும் எனக் கற்பொழுக்கம் ஆறு பிரிவுகளாகவும், ஒவ்வொரு பிரிவும் பல கிளவித் துறைகளாகவும் விரித்துக்கூறப்படுகிறது. இவ்வாறு தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்திப் பருவம் முதிர்ந்தபின் வாழ்க்கையை மக்களிடம் ஒப்படைத்துவிட்டுப்பொது நலம் புரிந்து புகழ் பெறுவர்.

உலக வழக்கு: இவ்வாறு களவு, கற்பு என இருவகைப் படுத்துக் கூறப்படும் செய்யுள் வழக்கமானது, உலக வழக்கை யொட்டியே செய்யப்பட்டதென்பது,

"நாடக வழக்கினும், உலகியல் [வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி [வழக்கம்" (அகத் 53)

என்பதால் விளங்கும். நாடக வழக்கம் — செய்யுள் வழக்கம். பாடல் சான்ற புலனெறி வழக்கம்—உலக வழக்கை அழகுறப் புனைந்து புலவர் பாடும் வழக்கம். ஆகவே, நமது முன்னையோர் உலகியல் வழக்கம் யாதென நாம் ஆராய்ந்து அறிவது இன்றியமையாத நமது கடமையில் ஒன்றாகும்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களையும், முட்டாள்தனமான செயல்களையும் இன்றும் கொண்டுள்ளனர். அன்று நம்பிய சகுனத்தடையை இன்றும் நம்புகிறார்கள்.

விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் நீண்ட நெடுங்காலம் கோடானுகோடி உழைப்பவர்களை சித்திரவதை செய்தார்கள். மனித சமுதாயம் இவர்கள் அடக்கு முறையால் கஷ்டக் கண்ணீர் வடித்தது. உழைப்பாளிகள் சிந்தும் உதிரக்கண்ணீரைக் கண்டு உள்ளம் நொதித்தார் மார்க்ஸ். உழைப்பாளிகளுக்கு ஒரு மார்க்கத்தை உபதேசித்தார். அவ்வுபதேசத்தை மனதிற்கொண்டு ஒற்றுமையற்ற, விஷய ஞானமற்ற உழைப்பாளிகளை ஒன்று திரட்டி முதலாளித்துவ சமூக அமைப்பைத் தகர்த்தெறிந்து விட்டு, உழைப்பாளிகள் ஆட்சியை ருஷியாவில் நிலைநிறுத்தினார் லெனின். ஆனால் நம் நாட்டிலோ விதிமேல் நம்பிக்கை வைத்து வேதனையை மறந்து வாழ்கின்றார்கள் உழைப்பாளிகள். 'எல்லாம் அவன் செயல்' என்று கடவுளை நினைத்துக் கஷ்டங்களைப் பொருட்படுத்துவதில்லை; கயவர்களின் சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ளுவதில்லை. இப்படிப்பட்ட நாட்டில் சமூகப்புரட்சி எப்படி ஏற்பட முடியும்?

மேனாட்டினர் அறிவுத் துறையில் ஆர்வங்கொண்டு ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று அணுக்குண்டு வரையில் கண்டுபிடித்து விட்டனர். ஆனால் நம் நாட்டிலோ ஒரு 'ராமன் ஒளி' கண்டுபிடிக்கப்பட்ட அளவிற்குத்தான் விஞ்ஞானம் வளர்ந்துள்ளது. நம் நாட்டில் ஒரு எடிஸனோ, நியூட்டனோ, மார்க்கோனியா, கொடேகோ பிறந்ததுண்டா? ஏன் நம்மிடையே நியூட்டன் மார்க்கோனி பிறக்க முடியாதுபோய்விட்டது?

அங்கே மழையை வருவிக்க விஞ்ஞான முறையைக் கையாளுகிறார்கள். இங்கே மாரியம்மனுக்குக் கொடை கொடுத்தால் மழை வருமா, அல்லது கொடும்பாவி கட்டியிழுத்தால் மழை வருமா என்ற யோசனையிலீடுபடுகிறார்கள். அங்கே ஒருவனுக்கு ஜன்னி என்றால் மருத்துவ சாலைக்குத் தூக்கிச் செல்லுவார்கள். இங்கே ஒருவனுக்கு ஜன்னியென்றால் அவனை முனிசாமி முன் கொண்டு நிறுத்துவார்கள். அவன் சவுக்கால் நோயாளியை அடிக்க அடிக்க, பேய் விரட்டப்படுகிறதென்றெண்ணிப் பேரின்பமடைவார்கள். அங்கே வீட்டிற்கொரு வாசகசாலையைக் காணலாம். இங்கே வீட்டிற்கொரு பிள்ளையார் கோவிலைப் பார்க்கலாம். அங்கே காலையில் எழுந்ததும் அன்றையச் செய்தித்தாள்களைப் புரட்டுவார்கள். இங்கே காலையில் பஜனைப்பாட்டுகள் பாடக்கேட்கலாம். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களை நினைவுறுத்திக் கொள்ளுவதற்காக அங்கே விழாக்கள் கொண்டாடுவார்கள். இங்கே ஆண்டுதோறும் கற்சிலைகளுக்குக் கலியாணம் செய்து வைத்துக் களியாட்டம் ஆடுவார்கள். அங்கே அவர்கள் விஞ்ஞானத்தை வளர்க்கிறார்கள். இங்கே இவர்கள் அஞ்ஞானத்திலுழலுகிறார்கள். என்றுதான் இவர்கள் மடமை நீங்கும்? அய்யோ! நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதர்களை நினைந்து விட்டால்!.

—"மா. முருகன்."

ராஜா முத்தையா

படித்துப் பாருங்கள்!

1. தற்போதைய அமெரிக்கா பிரபல எழுத்தாளர்களில் ஒருவர், புதியதாக ஒரு நாவல் எழுதினார். இந்த நாவல்தான் அவர் முதன் முதலில் எழுதியது. வறுமையின் காரணமாக தமது அரிய நாவலை ஒரு பாங்கி மானேஜரிடம் எடுத்துச் சென்று, அதை வைத்துக் கொண்டு 150 டாலர் கொடுக்கும்படி கேட்டார். பாங்கி மேனேஜர் விலை யுயர்ந்த பொருள்களைத் தான் இங்கு அடகுவைக்க முடியுமேயன்றி காகிதத்தில் எழுதிய நாவலுக்குப்பணம் கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டார்.

மன வேதனையுடன் வீடுதிரும்பியதும் அவருக்கு ஒரு தந்தி வந்தது. அதில், "நீங்கள் எழுதியிருக்கும் நாவலுக்கு 20,000 டாலருக்கு செக் அனுப்பியிருக்கிறோம். பெற்றுக்கொள்ளுங்கள்" என்று ஹாலிவுட்சிடி படக்கம்பெனியார் எழுதியிருந்தார்கள். அந்த நாவலை அவர்கள் படமாக எடுக்கப் போவதாகவும் அதில் கண்டிருந்தது. அதைக் கேட்ட பாங்கி மேனஜருக்கோ தூக்கி வாரிப் போட்டது.

2. லண்டன் பிலிம் புரொடெக்ஷன்ஸ் தயாரித்த 'வீழ்ந்த விக்கிரகம்' என்ற படத்தில் தனது சிறந்த இயற்கையான நடிப்பினால் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்த பாப்பி ஹென்றி என்ற 8 வயது சிறுவனை பிரபல டைரெக்டரான சர். அலெக்சாண்டர் கார்டா 30,000 பவுனுக்கு (3,99,000 ரூபாய்) ஒப்பந்தம் செய்திருக்கிறார். வெனிஸ் நகரத்தில் நடந்த படவிழாவில் பாப்பி நடித்த படத்திற்கு ஒரு சர்வதேச பரிசு வழங்கப்பட்டது. இப்படத்தில் பாப்பியின் நடிப்பு அபாரமென்று புகழப் படுகிறது.

3. ஜப்பானிலுள்ள சினிமாக் கொட்டகைகளில் ஒரே சமயத்தில் 4000-பேர் காட்சிகளைக் கண்டு ரசிக்கலாம். அங்குள்ள கொட்டகைகளில் நமது நாட்டிலுள்ள கொட்டகைகளைப்போல் 4, 5. வகுப்புகளில்லை. முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்றுகூடக் கிடையாது. டிக்கட் நான்கணாத்தான். நான்கணா கொடுத்து ஒரு டிக்கட் வாங்கிவிட்டால் ஒரு நாள்முழுவதும் காட்சிகளைக் கண்டு களிக்கலாம். ஒரு நாளைக்கு நான்கு ஆட்டங்கள். காலை 10-மணியிலிருந்து இரவு 11 மணிவரையில் எப்பொழுது வேண்டுமானாலும் காட்சிகள் பார்க்கலாம்.

காட்சி சாலைக்குள் சென்றதும் சுகாதாரத்தை முன்னிட்டு யாரும் புகை பிடிக்கக்கூடாது. அப்படி பிடிப்பவர்களுக்கென்று தனி அறைகள் இருக்கின்றன. நம் நாட்டைப் போல் எச்சில் துப்பும் பழக்கம் அங்கு இல்லவே இல்லை.

4. இமயமலையின் கிழக்குச் சாரலில் அதாவது பிரம புத்திராநதி சமவெளியில் பிரவேசிக்கும் பிரதேசத்தில் 90 அடி உயரமுள்ள ஒருவித மிருகங்கள் வசிக்கின்றனவாம். அங்கு காடுகள் மிகவும் அடர்த்தியாகவும், மரங்கள் உயரமாகவுமிருப்பதால் அம்மிருகம் அங்கு வாழ முடிகிறது. இம்மிருகம், அதாவது யானையைப்போல் 9 மடங்கு பெரியது.

5. கல்கத்தா நகரில் ஒளரா என்பது ஒரு பகுதி. கல்கத்தாவையும் ஒளராவையும் ஒளரா என்ற ஒரு நதி இரண்டாகப் பிரிக்கிறது. இந்த ஒளரா நதியில் முக்கிய ஒரு இடத்தில் போடப்பட்டிருக்கும் பாலத்தின் நீளம் இரண்டு பர்லாங். இது முழுவதும் இரும்பால் கட்டப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பர்லாங் நீளமுள்ள பாலத்திற்கு அடியில் தூணே கிடையாது. இது ஒரு அமெரிக்கா இஞ்ஜினியர் ஒருவரால்கட்டப்பட்டது. உலகத்திலேயே இது இரண்டாவது பிரசித்திபெற்ற பாலம். முதல் பாலம் அமெரிக்காவிலிருக்கிறது.

6. மொகலாய சக்கரவர்த்திகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஷாஜஹான். ஷாஜஹான் தன் ஆட்சி காலத்தில், தன்பெயர்என்றும்நிலைத்து நிற்கும்படி செய்ய, அவர் செய்த செயல்களுள், தாஜ்மஹால் கட்டியதும், செங்கோட்டை கட்டியதும் குறிப்பிடத்தக்கவை. தாஜ்மஹால்கட்டி முடித்ததும், அதன் எதிரிலேயே யமுனையின் அடுத்த கரையில் பிலாக் மஹால் என்ற கட்டிடத்தைக் கட்ட அஸ்திவாரம் போட்டார். அது ஆரம்பிக்கப்பட்டவுடன் அவரது குமாரன் ஒளரங்கசீப், அரசனாகவேண்டும் என்ற ஆசையால் தந்தையைப் பிடித்து ஆக்ரா கோட்டையில் சிறை வைத்தார். தந்தையைச் சிறையில் வைக்கும்போது ஒளரங்கசீப், "சிறையிலுள்ள தங்களுக்கு நான் செய்ய வேண்டியதென்ன என்று கேட்டார். நான் அருமையாகக் கட்டி முடித்த தாஜ்மஹாலை சிறையில் எந்த இடத்திலிருந்தும் பார்க்க வேண்டும். அதைப் பார்த்துக் கொண்டே நான் இறக்கவும் வேண்டும்" என்றார் ஷாஜஹான். அதன் படியே ஆக்ரா கோட்டையில் ஷாஜஹான் சிறை வைக்கப்பட்டிருந்த பகுதியில் விலையுயர்ந்த கற்கள் சுவர்களில் பதிக்கப்பட்டன. அக்கற்கள் மிகச் சிறியவை. அக்கற்களின் வழியாக இரண்டு மைல் தூரத்திலுள்ள தாஜ்மஹாலை மிக நன்றாகப் பார்க்க முடியும். தாஜ்மஹாலும், அதைச் சுற்றிலுமுள்ள பூந்தோட்டமும் மிகத் தெளிவாக அக்கற்களில் பிரதிபலிக்கும்படி அவ்வளவு திறமையாக அச் சிறுகற்கள் ஆக்ரா கோட்டைச் சுவர்களில் பதிக்கப்பட்டிருக்கின்றன. தாஜ்மஹாலைப் பார்க்கச் செல்கின்றவர்கள் இன்னும் இதைப் பார்க்கலாம்.

7. ஆக்ராவிலுள்ள தாஜ்மஹாலுக்கும் டில்லியிலுள்ள செங்கோட்டைக்கும் உள்ள தூரம் 120 மைல்கள். இந்த 120 மைல் நீளத்திற்கும் பூமிக்கடியில் யமுனை நதிக் கரை ஓரமாகவே சுரங்க வழி ஒன்று இருக்கிறது. இது வெட்டப்பட்ட காலத்திலிருந்து இதுவரையில் ஒரு வெள்ளைக்காரரே கடைசிவரையில் சுரங்கத்திற்குள் சென்றார். வேறு எவருக்கும் அதில் பிரயாணம் செய்வதற்குத் துணிவு பிறக்கவில்லை. "எமாரம்"

மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்ட அறிவியக்கத் தமிழிசைப் போட்டி.

மதுரை செல்வம் திராவிடர் கழக நிதிக்காக 17—4—49 ஞாயிறு காலை 9 மணிக்கு மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில் தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இசைப்பேச்சாளர்:—தோழர் மு. சு. நடையரசுஇசைவாணர்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

பிரதிநிதி ரூ. 1—0—0. பார்வையாளர் ரூ. 0—4—0. போட்டியில் கலந்து கொள்பவர்கள் 8-4-49 தேதிக்குள் எழுதி அனுமதிபெறவேண்டும்.

தலைவர், செல்வம் திராவிடர் கழகம்,
32-A மீனாட்சி தோப்புத்தெரு, பொன்நகரம், மதுரை.

கிராமந்தோறும்! "குணமணி" தருமவைத்தியம்!!

சித்தர் குருகுலத்தினின்று மாதந் தோறும் அரிய தமிழ் இரகசிய வைத்திய முறைகளுடன் வெளி வரும் வெளியீடு. சந்தாதாரர்களுக்கு மட்டும் கிராம மக்களுக்கு 100 பேர்கள் வரை 12 வித இலவச மருந்துகள் தருமசேவைக்குத் தரப்படும்—வருடச் சந்தா ரூ 6. 6 மாத சந்தா ரூ 3. தனிப்பிரதி அணா 8. வி. பி. கிடையாது.

சித்தர் குருகுலம், குரோம்பேட்டை S.I.Ry.

(1ம் பக்கத்தொடர்ச்சி)

சித்தான். நான் என்னதான் செய்வது? ஒரு தடவை கங்கையைத் தலையில் தூக்கிக்கொண்டு ஓட்டமாய் ஓடினேன்; அவளுக்கு மாதவிடாய் ஆகி உதிரம் என் நெற்றியில் வழியவே, எதிரே வந்த நாராயணன் கேலி செய்தான். நான் உடனே அந்த ரத்தத்தை நெற்றியில் திலகமாக இட்டுக்கொண்டேன். என் மானத்தைக் காப்பாற்றிக்கொண்டது மட்டுமல்லாமல், உலகத்தில் சைவர்கள் யாவரும் என்னைப்போல் நெற்றியில் சிவப்புப் பொட்டு வைத்துக்கொள்ளவும் ஏற்பாடு செய்து விட்டேன். நீ கூட நெற்றியில் பொட்டு வைத்திருப்பதற்கு அடிப்படைக்காரணம் இது தான்! இரண்டாவது தாரமும் இணங்கிவரவில்லை. என் மனநிலை எப்படியிருக்கும்? சொந்த மனைவியர் சோரம் போவதைக் காண்பவன் சுயபுத்தியுடன் வாழமுடியுமா? கோபம் தலைக்கேறியது; அத்துடன் பித்தும் பிடித்தது; கடைசியில் காம உணர்ச்சியும் கரை கடந்தது!

ஒருவழியும் புலப்படவில்லை. என் மைத்துனன் நாராயணன் உபதேசம் உதவி செய்தது. அவன் சொன்னான்; "சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளே யாமாகில் கூறாமற் சந்நியாசமகொள்" என்று. பிறகு தான் ஆண்டிக்கோலம் பூண்டேன். ஆடைகளைக் களைந்துவிட்டு, உடலெல்லாம் நீறுபூசிக், கையில் ஓடும் எடுத்துக் கொண்டேன். கொஞ்சநாள் பிச்சை எடுத்துண்டு பொழுது போக்கினேன்.

அப்படி அலைந்து வாழும் போதுதான் ஒரு நாள் தாருகா வனத்துப் பக்கம்போக நேர்ந்தது. அங்கிருந்த ரிஷிகள் யாவரும் எங்கேயோ யாகத்துக்குப் போயிருந்தனர். ரிஷி பத்தினிகள் தான் அழகு குலையாமல் இருப்பார்களே, உனக்குத் தெரிந்தது தானே?"

"அப்படியா? எனக்குத் தெரியாதே!"

"என்னப்பா இது, தெரியாதென்கிறாய்! கௌதமர் மனைவி அகல்யா, அத்திரி மனைவிதாரா இவர்கள் கதை தெரியாதா?"

"ஓஹோ, சரி, சரி! மேலே சொல்லும்."

"என்நிர்வாணக்கோலத்தைக்கண்ட ரிஷிபத்தினிகள் கருத்திழந்து, காமவயப்பட்டு, ஆடை நெகிழ்ந்ததும், அணி கழன்றதும்கூட அறியாமல் என்னைப் பின்தொடர்ந்து ஓடி வந்தனர். நானும் தக்க இடந்தேடிப் போய்க்கொண்டிருந்தேன். இதற்குள் இச்செய்தியைக் கேள்விப்பட்ட ரிஷிகள் அவமானந்தாங்காமல், என்மேல் தங்கள் கோபத்தைக் காட்டினார்கள். யானை, புலியையெல்லாம என்மேல் ஏவி என்னைக் கொல்ல முயன்றார்கள், முடியவில்லை.. கடைசியில் என்...அறுந்து விழும்படியாகச் சாபமிட்டுவிட்டார்கள். என் நிர்க்கதியான நிலையையறிந்த என்மைத்துனன் நாராயணன், உடனே மோகினி ரூபத்தில் வந்து, அறுந்துவிழ இருந்த என்...யைத் தன்...க்குள் நுழைத்துக்கொண்டான். நானும் சமாளித்துக்கொண்டு, இந் நிகழ்ச்சியைப் பிரமாதப் படுத்தி, இந்த வடிவத்தையே இலிங்கம் என்று கற்பித்து, எல்லோரும் வணங்கி வழி படும்படி ஏற்பாடு செய்து விட்டேன்"

"அடபாவி! நாங்கள் பெருமையாக வழி படும் இலிங்கத்தின் உற்பத்தி இவ்வளவு கேவலமானதா? வெட்கந் தாங்கவில்லையே எனக்கு!"

"அட, பதறாதே தம்பி! பக்திமான்களுக்குத்தான் இதை யெல்லாம் சிந்திக்கும் புத்தி கிடையாதே! தாருகா வனத்துச் சம்பவத்தின் மூலம் எனக்குப்புதிய வழியொன்று புலப்பட்டது. என் காமப்பசிதீர, அதாவது என் மைத்துனன் நாராயணனை மோகினி ரூபமெடுக்கச்செய்து என் வேட்கையைத் தணித்துக்கொள்வது என்ற முடிவுக்குவந்தேன். அவனும் ஒத்துக்கொண்டான்."

"என்ன, என்ன! ஆணை ஆண்..... சே, சே!! கேவலம், கீழ்த்தரம்!!!"

"ஏன், இவன் ராமாவதாரத்தில் கூடத் தசரதனுக்கு அம்முறையில் பயன்பட்டவன் தானே! கேள்! இப்படி ஒருமுறை நானும் நாராயணனும் அல்வழிப் புணர்ச்சியிலீடுபடுகையில் வெளி வந்த இந்திரியத்தை நான் கையில் பிடிக்கவே அதிலிருந்து தோன்றியவன் தான் இன்று கிராம தேவதையாக விளங்கும் அய்யனார்.

நானும் நாராயணனும் இவ்விதம் இன்பம் அநுபவித்துக்கொண்டு வரும் செய்தி எங்கள் ஊர்பூராவும் பரவிவிட்டது. என்னை ஏசாதவர் கிடையாது. நாராயணனை அவன் மனைவி லட்சுமி, பிறகு வெளியிலேயே விடவில்லை. பெண்களெல்லாம் என்னைக் கண்டால் ஓடி ஒழியத் தலைப்பட்டனர். பித்தம் முற்றிவிட்டது; பிதற்றித் திரிந்துகொண்டிருந்தேன்.

என் மூத்த மகன்தான் தாயின்மேல் மோகங்கொண்டு, நான் வெகுண்டதால் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டான். தன் தாயைப்போல் பெண் கிடைத்தால்தான் மணம் புரிவது என்று அவன் பிடிவாதமாய் ஆற்றங்கரை, குளத்தங்கரை ஓரமாய் அலைகிறான். சிறியவனான கந்தன பெரிய கைகாரன். தேவேந்திரன் மகள் தேவயானையை எப்படியோ திருமணம் புரிந்துகொண்டான். ஆனால் அவள் மேல் விருப்பமில்லாமல் வள்ளி என்ற குறவர் மகள் ஒருத்தியின்மேல் மையலுற்றுத் தன் தமையன் ஆதரவுடன் அவளை மணந்தான். மண விழாவுக்கு என்னையோ, தன்னைப் பெற்ற அன்னையையோ அழைக்கவேயில்லை.

இப்படியாகத் தாலி கட்டிய மனைவியரும் எனக்குத் துரோகமிழைத்தனர்; பெற்ற மக்களும் உதாசீனம் செய்தனர். இனி வேற்றிடம் நாடுவது தவிர வேறு வழியில்லை என்று நான் முடிவு செய்தேன். அதன்பின்னர்த்தான் இயற்பகை போன்ற மூட பக்தர்களைஅடுத்து அவர்கள் மனைவிமாரை எனக்கு அளிக்கும்படி வேண்டினேன். பக்தர்கள் சம்மதித்தாலும், உன்னைப்போல் சில நாத்திகர்கள் தடுத்துவிட்டனர்.

எவ்வளவு நாள்தான் இப்படி நாதியற்று, நாட்டமெல்லாம் வீணாகி ஏங்கித் தவிப்பது? கடைசியில் தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்துத்தான் விஷத்தை அருந்தியுமாகிவிட்டது. இச் சந்தர்ப்பத்தில் எங்கேயோ இருந்து ஓடிவந்தாள் பார்வதி. தொண்டையைப் பிடித்து அமுக்கி, விஷத்தை வெளியே கக்கும்படி செய்துவிட்டாள். நான் திகைத்தேன், "பார்வதி ஏனடி என்னைத் தடுத்தாய்? அப்படியானால் இனிமேல் என்னுடனிருந்து ஒழுங்காக வாழ்க்கை நடத்துகிறாயா? நீ செய்த தோஷங்களுக்குப் பிராயச்சித்தம்—நெய்யைக் கொண்டு—நடத்தி விடு! உன்னை மன்னித்து விடுகிறேன்." என்று ஏக்கமும் துக்கமும் தொனிக்க வினவினேன். அவளோ "போமையா, பித்துக்கொள்ளி!" என்று என் முகத்திலிடித்துவிட்டு ஓடிவிட்டாள். இந்தமாதிரிக் கேவலமான நிலையில் நான இருக்கும்போது, நீயேன் என்னை அழைத்தாய்? "சரி, உனக்கு விவாகமாகிவிட்டதா?" என்று சிவனார் கேட்டதும், "அயோக்கியத்தனமாய்ப் பேசாதீர்! அந்தப் பழைய பரமசிவன் வேலையெல்லாம் இங்கே நடவாது! நான் பகுத்தறிவுவாதியாக்கும்" என்று கூக்குரலிட்டேன்...........

உடலெல்லாம் வியர்த்துச் சட்டை முழுதும் நனைந்திருந்தது. எழுந்து அமர்ந்து பெரிய 'கொட்டாவி' ஒன்று விட்டேன் சட்டசபை அங்கத்தினர் வாயைத் திறக்கும் காரணம்போல்!

—["பெருச்சாளி"]

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி' ஈரோடு.

ரோஜா முத்தையா